26-12-2012 Dinathanthi



கோயம்பேடு மார்க்கெட் அருகே மெட்ரோ ரெயில்கள் நிறுத்தப்படுவதற்கான யார்டு, கட்டுமான நிலையில் இருப்பதை படத்தில் காணலாம்.

### சென்னையில் மெட்ரோ ரெயில் போக்குவரத்திற்காக

# 32 இடங்களில் ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணி தீவிரம்

## உலகத்தரத்தில் அமைக்கப்படுகிறது

சென்னை, டிச.26-

மெட்ரோ ரெயில் போக்குவரத்திற்காக சென்னையில் 32 இடங்களில் உலகத் தரத்தில் ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

**ரூ.14,600 கோடி செலவில்...**

இந்தியாவில் சென்னை 4-வது பெரிய நகரம். சென்னை மாநகரின் மக்கள் தொகை சுமார் 80 லட்சம். வாகனங்களின் எண்ணிக்கை 26 லட்சம். சென்னையில் பெருகி வரும் போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும் சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படை செலவுத் தொகை ரூ.14 ஆயிரத்து 600 கோடி ஆகும். சென்னையில் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இரண்டு வழித்தடங்கள்**

முதல் வழித்தடம், வண்ணாரப்பேட்டையில் தொடங்கி சென்னை விமான நிலையம் வரை செல்கிறது. இதன் நீளம் 23 கிலோ மீட்டர். இதில், 14.3 கிலோ மீட்டர் (வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை) தூரத்திற்கு சுரங்கப் பாதை அமைக்கப்படுகிறது. வண்ணாரப்பேட்டை, மண்ணடி, ஐகோர்ட்டு (சென்டிரல்), ஓமந்தூரார் அரசினர் தோட்டம், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு, அண்ணா மேம்பாலம் (ஜெமினி), தேனாம்பேட்டை, சேமியர்ஸ் சாலை, சைதாப்பேட்டை ஆகிய 10 இடங்களில் சுரங்க பாதை ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மீதமுள்ள 8.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதை அமைக்கப்படுகிறது. பறக்கும் பாதையில் சின்னமலை, கிண்டி (மெட்ரோ), ஆலந்தூர், ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் (ஓ.டி.ஏ.), மீனம்பாக்கம், விமான நிலையம் ஆகிய 6 இடங்களில் பறக்கும் பாதை ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**32 இடங்களில் ரெயில் நிலையங்கள்**

2-வது வழித்தடம், சென்டிரலில் தொடங்கி பரங்கிமலை வரை செல்கிறது. இதன் நீளம் 22 கிலோ மீட்டர். இதில், 9.7 கிலோ மீட்டர் (சென்டிரலில் இருந்து திருமங்கலம் வரை) சுரங்கப் பாதை அமைக்கப்படுகிறது. சென்னை சென்டிரல், எழும்பூர், நேரு பூங்கா, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, ஷெனாய் நகர், அண்ணாநகர் கிழக்கு, அண்ணாநகர் டவர், திருமங்கலம் ஆகிய 9 இடங்களில் சுரங்க பாதை ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

மீதமுள்ள 12.3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதை அமைக்கப்படுகிறது. கோயம்பேடு, மத்திய புறநகர் பேருந்து நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர்-கே.கே.நகர், சிட்கோ (ஆலந்தூர்), பரங்கிமலை ஆகிய 7 இடங்களில் பறக்கும் பாதை ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இரண்டு வழித்தடங்களிலும் மொத்தம் 32 ரெயில் நிலையங்களுக்கான கட்டுமானப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

**சுரங்க பாதை பணி தீவிரம்**

முதன்முதலில், சென்னை பூந்தமல்லி சாலையில் உள்ள நேரு பூங்காவில் இருந்து எழும்பூர் வரை சுரங்க பாதை தோண்டும் பணி கடந்த ஜூலை மாதம் தொடங்கியது. இதுவரை 291 மீட்டர் நீளத்திற்கு சுரங்க பாதை அமைக்கப்பட்டு உள்ளது. இதுபோல வண்ணாரப்பேட்டையிலும் சுரங்க பாதை தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மே தின பூங்காவில் இருந்து சென்டிரல் வரையிலும், ஷெனாய் நகரில் இருந்து அண்ணாநகர் கிழக்கு வரையிலும், சைதாப்பேட்டையில் இருந்து சேமியர்ஸ் ரோடு வரையிலும் சுரங்க பாதை தோண்டும் பணி விரைவில் தொடங்க உள்ளது. இதற்காக டனல் போரிங் இயந்திரத்தைப் பொருத்தும் பணி வேகமாக நடக்கிறது.

**11 கிலோ மீட்டரில் சோதனை ஓட்டம்**

கோயம்பேடு முதல் பரங்கிமலை வரையிலான 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதை அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. பறக்கும் பாதை அமைக்கப்பட்ட இடத்தில் தண்டவாளம் பதிக்கும் பணியும், மின்சார லைன் மற்றும் சிக்னல் அமைப்பதற்கு வசதியாக மின் கம்பங்களை நிர்மாணிக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு இறுதியில் கோயம்பேடு - பரங்கிமலை இடையே மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

**எஸ்கலேட்டர், லிப்ட்டுகள்**

மெட்ரோ ரெயிலில் பயணிகள் பயணம் செய்வதற்கு வசதியாக சுரங்கம் மற்றும் பறக்கும் ரெயில் நிலையங்களில் 300 எஸ்கலேட்டர்களும் (நகரும் படிக்கட்டுகள்), 125 லிப்டுகளும் அமைக்கப்பட உள்ளன. சீனாவில் எஸ்கலேட்டர்களும், சென்னை அருகே பூந்தமல்லியில் லிப்ட்டுகளும் உலகத் தரத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியை மெட்ரோ ரெயில் நிலைய அதிகாரிகள் சமீபத்தில் ஆய்வு செய்தனர். அடுத்த சில மாதங்களில் மெட்ரோ ரெயில் பெட்டிகளும் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**2014-ம் ஆண்டு மெட்ரோ ரெயில் ஓடும்**

இதற்கிடையே, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் பின்புறம், மெட்ரோ ரெயில் டெப்போ கட்டப்பட்டு வருகிறது. இங்கு மெட்ரோ ரெயில்களை சுத்தம் செய்து பராமரிக்கும் பணி நடைபெறும். மெட்ரோ ரெயில்களை இயக்குவதற்கான அதிநவீன கட்டுப்பாட்டு அறையும் இங்கு அமைக்கப்படுகிறது. இப்படி பல்வேறு கட்டங்களாக மெட்ரோ ரெயில் பணிகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன. இதேவேகத்தில் பணிகள் நடைபெற்றால், 2014-ம் ஆண்டு தொடக்கத்தில் கோயம்பேடு - பரங்கிமலை இடையே 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதையில் மெட்ரோ ரெயில்கள் ஓடும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.